24th January 1972]

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இப்படி ஒரு தொழிற்சாலே பதிவு செய்யப்பட்டது எந்த ஆண்டில் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேதி விவரம் என்னிடத்தில் இல்லே.

Long Distance Double Decker Buses

*14. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:—

(a) whether Double Decker buses run on long distance routes have been withdrawn with immediate effect;

(b) if so, the reasons therefor; and

(c) the number of buses so withdrawn?

நீள் தொலேவு மாடிப் பேருந்துகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நீள் தொலேவு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மாடிப் பேருந்துகள் உடனடியாக எடுக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அவ்வாறு எடுக்கப்பட்ட பேருந்துகள் எத்தனே?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) இரட்டை அடுக்குப் பேருந்துகளேப் பொது மக்கள் விரும்பவில்லே.

(உ) பதினுன்கு.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: அப்பேருந்துகள் இப்போது என்ன பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பேருந்துகள் சாதாரணப் பேருந்துகளாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: இதனுல் எவ்வளவு நஷ்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதுபற்றிய விவரமில்லே.

திரு. டி. சந்தோஷம்: இப்படிப்பட்ட பேருந்துகளேப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்னுல் இவை நாட்டின் இதர பகுதிகளில் பயன்படுத்தப் பட்டனவா என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவற்றை நாம் உபயோகித்தோமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கிட்டத்தட்ட 200-க்கு மேற்பட்ட பேருந்துகளில் 14 பேருந்துகள்தான் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை தருகிற பலனேப்பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற அடிப்படையில் அவை விடப்பட்டன. மாடி பஸ்களில்

[24th January 1972

பயணம் செய்யும்போது, மேலே அமருகிறவர்களுக்குப் போதிய இட வசதி இல்லை என்று பயணிகள் கருதுவதால், மேலும் அதை விஸ்தரிப்பது அவசிய மில்லை என்று கருதி அவற்றை நிறுத்தியிருக்கிறோம்.

Advocates for the Transport Department

* 15. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(*a*) whether a panel of advocates has been constituted for the Transport Department;

(*b*) if so, on what basis the selection was made; and

(*c*) the expenditure incurred in constituting such panel?

போக்குவரத்துத் துறைக்கு வழக்குரைஞர்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) போக்குவரத்துத் துறைக்காக வழக்குரைஞர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் தேர்வு நடத்தப்பட்டது ?

(உ) இக்குழுவை அமைப்பதில் ஏற்பட்ட செலவு என்ன ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : (*a*) Yes.

(*b*) The selection has been made at the discretion of the Government.

(*c*) It is proposed to pay a retainer's fee of Rs. 250 per mensem besides the regulation fee for the cases attended to by the Legal Advisers. No expenditure was incurred in constituting such a panel.

திரு. சா. கணேசன்: இப்போது மாநில ஆட்சி நடத்திய போக்கு வரத்துகள் வெவ்வேறு குழுக்களாக மாற்றப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு ரைஞர்கள் அந்தக் குழுக்களுக்கு முறைப்படி உத்தரவிட்டு மாற்றப்பட்டிருக் கிறார்களா ? அல்லது இனி புதிதாக வேறு அமைப்பு ஏதாவது அமைக்க அரசு கருதியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : இப்போது நியமிக்கப்பட் டிருக்கிற வழக்குரைஞர்கள் அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பல்வேறு போக்குவரத்துக் குழுக்கள் இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அவைகளுக்கு இவர்களையே பயன் படுத்தலாமா அல்லது வேறு வழக்குரைஞர்களை நியமிக்கலாமா என்பதைப் பற்றி அங்குள்ள போக்குவரத்துக் கழகத்திலுள்ள நிர்வாகிகள் முடிவு செய்ய வேண்டும்.